NEWBEC
NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் 33 ஆம் ஞாயிறு | 16 நவம்பர் 2025
(உலக ஏழைகளின் தினம்)

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: குடும்பம் (உடன் பயணம்)
கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கையையும் உறவுகளையும் வலுப்படுத்த அழைப்பு

# கடவுளை மையமாகக் கொண்ட குடும்பங்களாக ஒன்றாக நிலைத்திருத்தல்

துணைநிற்பது அழுத்தத்தைத் தருகிறது. இயேசு துன்பங்கள் வரும் என்பதைப் பற்றி விவரிக்கிறார். போர்கள், வதந்திகள், துரோகங்கள், பின்னர் ஒரு ஆச்சரியமான உத்தியைக் கொடுக்கிறார். சகிப்புத்தன்மை, கடினப்படுத்தப்படாத உயிர்வாழ்வு, நடைமுறை மாறும்போது அன்பை நடைமுறைக்கு கொண்டுவரும் உண்மையுள்ள விடாமுயற்சி.



பல மலேசிய குடும்பங்களுக்கு இப்போது, தேர்வு மன அழுத்தம், நிதிப்பற்றாக்குறை என்னும் சுமை மற்றும் வானிலை எச்சரிக்கைகள் ஆகியவற்றின் காலகட்டமாகும். சகிப்புத் தன்மை என்பது நேர்மையான வேலை மற்றும் எளிமையான நம்பகத்தன்மை.(2 தெசலோனிக்கர்) சோர்வாக இருக்கும்போது கூட நம்முடைய இறைவேண்டல், மற்றும் நம்முடைய திட்டங்களை செயல்படுத்தமுடியாத அச்சுறுத்தல் இருக்கும்போது, ஞாயிறு திருப்பலி நம்முடைய மையமாக வைக்கவேண்டியது நம்முடைய தேர்வாக இருக்கவேன்டும்.

ஆண்டவரின் பெயருக்கு அஞ்சி நடக்கிறவர் மேல் நீதியின் கதிரவன் எழுவான், நலம் தரும் மருந்து இருக்கும் என்று இறைவாக்கினர் மலாக்கி உறுதியளிக்கிறார். கடவுளின் எதிர்காலம் பீதியடைவதற்கல்ல ஆனால் மறுசீரமைக்க. (அனைவரும் உடன்பிறந்தோர் (Fretelli Tutti 32) யாருமே தனித்து மீட்கப்படுவதில்லை. நாம் ஒன்றாகத் தான் மீட்படையமுடியும்.) பயம் உங்கள் செயல்களைச் செய்ய அனுமதி மறுக்கும்போது அண்டை அயலாருக்கு நீங்கள் தரும் ஒரு பொறுப்புணர்வு, சமூக நட்புறவு மற்றும் நிலையான ஒன்றைச் செய்ய திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுக்கிறார்.

ஒன்றித்த பயணம் செய்யும் மக்களாக நாம் முதலில் செவிமடுக்கிறோம். உண்மையை அன்பாகப் பேசுகிறோம். உரக்கப் பேசும் தலைப்புகளுக்காக அல்ல, இறைவேண்டல்களுக்குப் பின் முடிவுகளை எடுக்கிறோம். குடும்பங்கள் இதை மாதிரியாகக் காட்டலாம். நம்முடைய கைதொலைபேசிகளைப் பயன்படுத்தும் நேரத்தை பெற்றோர் மற்றும் பதின்மவயதினர் முறைப்படுத்தலாம். தம்பதியர்களுக்கிடையே தேவை அதிகம் இருப்போருக்கு இரக்கத்தை அதிகமாகக் காட்டலாம்; ஆண்டு தோறும் வெள்ளம் தாக்கும் இடங்கள், மற்றும் பருவத்தின் பிற தேவைகளுக்கு அதிச - க்களாக உதவியைத் தரலாம். கிறிஸ்தவ சகிப்புத்தன்மை என்பது பற்களைக் கடித்துகொண்டு செய்வது அல்ல. வரலாற்றைத் தன்னகத்தே கொண்ட ஒருவர் அமைதியான பார்வை கொண்டவர், மற்றும் தயவை விட்டுக்கொடுக்க மறுப்பவர் அவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இப்படி வாழும்போது நம் இல்லங்கள் விரைவு மற்றும் கவலை என்னும் கலாச்சாரத்தில் மெதுவாக முரண்படுகின்றன. மேலும் மற்றவர்கள் உங்களைத் தேடிவரும் கலங்கரை விளக்கங்களாக மாறுவீர்கள்

**இந்த வாரம்:** ஒவ்வொரு நாளும் ஒரு முறையைக் கையாளுங்கள். இறைவேண்டல், உணவு, உரையாடல். வெள்ளம் வருமுன் அல்லது இந்தப் பருவத்தின் தேவைகளுக்காக ஒரு அவசரத் திட்டத்தைத் தயாரிக்கவும்.

இருளைத் தாங்கிக்கொள்ளும் சகிப்புத்தன்மை என்பது மாபெரும் ஒளிக்கான தயாரிப்பு
*புனித சிலுவை யோவான்*

**இன்றைய இறைவார்த்தை:**

மலாக்கி 3: 19-20

திருப்பாடல் 97: 5-9

2 தெசலோனிக்கர் 3: 7-12

லூக்கா 21: 5-19

INTERNAL CIRCULATION ONLY
BUL 46/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org